www.Padasalai.Net www.TrbTnpsc.com

Tsl9T

08-04-25

# தென்காசி மாவட்டம்
## முழு ஆண்டுத் தேர்வு - 2025

### வகுப்பு 9
### தமிழ்

காலஅளவு: 2.30 மணிநேரம் மதிப்பெண்கள்: 100

குறிப்பு: 1) இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது
2) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்

## பகுதி - I

**I. உரிய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் எழுதுக.** 15×1=15

1) இந்தியநாடு மொழிகளின் காட்சிச் சாலையாகத் திகழ்கிறது என்று குறிப்பிட்டவர் ..........
அ) குமரிலபட்டர் ஆ) ச.அகத்தியலிங்கம்
இ) ஹீராஸ் பாதிரியார் ஈ) மாக்ஸ் முல்லர்

2) 'மிசை' என்பதன் எதிர்ச்சொல் என்ன?
அ) கீழே ஆ) மேலே இ) இசை ஈ) வசை

3) பொருந்தாத இணை எது?
அ) ஏறுகோள் - எருதுகட்டி ஆ) திருவாரூர் - கரிக்கையூர்
இ) ஆதிச்சநல்லூர் - அரிக்கமேடு ஈ) பட்டிமன்றம் - பட்டிமண்டபம்

4) பின்வரும் தொடர்களைப் படித்து 'நான்' யார் என்று கண்டுபிடிக்க
*அறிவியல் வாகனத்தில் நிறுத்தப்படுவேன்*
*எல்லாக் கோளிலும் ஏற்றப்படுவேன்*
*இளையவர் கூட்டம் என்னை ஏந்தி நடப்பர்*
அ) இணையம் ஆ) தமிழ் இ) கணினி ஈ) ஏவுகணை

5) பொருத்தமான விடையைத் தேர்க
அ) சிறுபஞ்சமூலம் - 1. காப்பிய இலக்கியம்
ஆ) குடும்பவிளக்கு - 2. சங்க இலக்கியம்
இ) சீவக சிந்தாமணி - 3. அற இலக்கியம்
ஈ) குறுந்தொகை - 4. தற்கால இலக்கியம்
அ) அ-3, ஆ-4, இ-1, ஈ-2 ஆ) அ-2, ஆ-3, இ-1, ஈ-4
இ) அ-3, ஆ-1, இ-4, ஈ-2 ஈ) அ-4, ஆ-1, இ-2, ஈ-3

6) பூவாது காய்க்கும், மலர்க்கை - அடிக்கோடிட்ட சொற்களுக்குரிய இலக்கணம் யாது?
அ) பெயரெச்சம், உவமைத்தொகை ஆ) எதிர்மறைப் பெயரெச்சம், உருவகம்
இ) வினையெச்சம், உவமை ஈ) எதிர்மறை வினையெச்சம், உவமைத்தொகை

7) பல்லவர் காலச் சிற்பக்கலைக்குச் சிறந்த சான்று ..........
அ) மாமல்லபுரம் ஆ) பிள்ளையார்பட்டி
இ) திரிபுவனவீரேசுவரம் ஈ) தாடிக்கொம்பு

8) ஐந்து சால்புகளில் இரண்டு
அ) வானமும் நாணமும் ஆ) நாணமும் இணக்கமும்
இ) இணக்கமும் சுணக்கமும் ஈ) இணக்கமும் பிணக்கமும்

9) இந்திய தேசிய இராணுவத்தை ............ இன் தலைமையில் ........... உருவாக்கினர்
அ) சுபாஷ் சந்திர போஸ், இந்தியர் ஆ) சுபாஷ் சந்திரபோஸ், ஜப்பானியர்
இ) மோகன்சிங், ஜப்பானியர் ஈ) மோகன்சிங், இந்தியர்

10) 'ஞானம்' என்பதன் பொருள் யாது?
அ) தானம் ஆ) தெளிவு இ) சினம் ஈ) அறிவு

11) வண்ணதாசனுக்கு சாகித்திய அகாதெமி விருது பெற்றுத்தந்த நூல்
அ) ஒரு சிறு இசை ஆ) முன்பின்
இ) அந்நியமற்ற நதி ஈ) உயரப்பறத்தல்

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

*அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாயவிழ*
*வெள்ளம்தீப் பட்ட(து) எனவெரீஇப் புள்ளினம்தம்*
*கைச்சிறகால் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ*
*நச்சிலைவேல் கோக்கோதை நாடு.*

12) இப்பாடல் இடம்பெற்றுள் நூல் எது?
அ) சிலப்பதிகாரம் ஆ) முத்தொள்ளாயிரம்
இ) குறுந்தொகை ஈ) மதுரைக்காஞ்சி

13) 'அள்ளல்' என்ற சொல்லின் பொருள்
அ) வயல் ஆ) குஞ்சு இ) சேறு ஈ) நீர்

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



14) இப்பாடலில் இடம்பெற்றுள் நயம்
அ) எதுகை ஆ) மோனை இ) இயைபு ஈ) முரண்

15) இப்பாடலில் பயின்று வந்துள்ள அணி
அ) உவமையணி ஆ) உருவக அணி
இ) தற்குறிப்பேற்ற அணி ஈ) தன்மையணி

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க 21ஆவது வினா கட்டாய வினாவாகும்.** **4×2=8**

16) **விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க**
அ) 1991 இல் இணையம், பொதுமக்களின் பயன்பாட்டுக்கு வந்தது
ஆ) தமிழ்மக்கள் துணையுடன் போராடிய நேதாஜியைக் கண்டு ஆங்கிலப் பிரதமர் சர்ச்சில் கோபம் கொண்டார்.

17) கண்ணி என்பதன் விளக்கம் யாது?

18) சாரதா சட்டம் எதற்காக இயற்றப்பட்டது?

19) இந்திய தேசிய இராணுவத்தில் குறிப்பிடத்தகுந்த தமிழகவீரர்கள் யாவர்?

20) பகுத்தறிவு என்றால் என்ன?

21) 'தூண்' என முடியும் திருக்குறளை எழுதுக

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க** **5×2=10**

22) வீணையோடு வந்தாள், கிளியே பேசு - தொடரின் வகையைச் சுட்டுக

23) **பிழைநீக்கி எழுதுக**
அ) சர் ஆர்தர் காட்டன் கல்லணையின் கட்டுமான உத்தி கொண்டுதான் தௌலீஸ்வரம் அணையைக் கட்டியது
ஆ) மழையே பயிர்க்கூட்டமும் உயிர்க்கூட்டமும் வாழப் பெருந்துணை புரிகின்றன

24) **தொடரைப் பழமொழி கொண்டு நிறைவு செய்க**
அ) இளமையில் கல்வி .............
ஆ) கற்றோர்க்குச் சென்ற .............

25) **கலைச்சொற்கள் தருக.**
அ) Personality ஆ) Missile

26) **தமிழெண்களைக் கொண்டு நிறைவு செய்க**
அ) உயிரெழுத்துகளின் எண்ணிக்கை ..........
ஆ) சார்பெழுத்துகள் .......... வகைப்படும்

27) **பொருத்தமான உரிச்சொற்களை எழுதுக**
அ) ........... பெரும் பொதுக்கூட்டம். (கடி, மா)
ஆ) ........... சிறந்தது. (சால, மழ)

28) 'உணர்ந்த' - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க** **2×3=6**

29) மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிறதிராவிட மொழிகளில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது?

30) குறிப்பு வரைக. டோக்கியோ கேடட்ஸ்

31) **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

அக்காலத்தில் பெண்கள் அனைத்துத் துறைகளிலும் ஒடுக்கப்பட்டிருந்தனர். எனவே நாட்டு விடுதலையைவிட, பெண் விடுதலைதான் முதன்மையானது என்று கூறினார் பெரியார். கல்வி வேலைவாய்ப்பு ஆகியவற்றில் ஆண்களுக்கு நிகரான உரிமை, பெண்களுக்கும் அளிக்கப்பட வேண்டும். வேலைவாய்ப்பில் ஐம்பது விழுக்காடு இட ஒதுக்கீடு பெண்களுக்குத் தரப்பட வேண்டும். பொருளாதாரத்தில் பெண்கள் பிறரைச் சார்ந்து வாழவேண்டிய நிலையில் இருக்கக்கூடாது

அ) அக்காலத்தில் யார் அனைத்துத் துறைகளிலும் ஒடுக்கப்பட்டிருந்தனர்?
ஆ) நாட்டு விடுதலையைவிட எது முதன்மையானது என்று பெரியார் கூறினார்?
இ) வேலைவாய்ப்பில் பெண்களுக்கு எத்தனை விழுக்காடு இடஒதுக்கீடு தரப்பட வேண்டும்.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க 2×3=6
34ஆவது வினா கட்டாய வினாவாகும்.

32) நிலைத்த புகழைப் பெறுவதற்குக் குடபுலவியனார் கூறும் வழிகள் யாவை?
33) குறிஞ்சி நிலம் மணப்பதற்கான நிகழ்வுகளைக் குறிப்பிடுக.
34) அடிபிறழாமல் எழுதுக
அ) 'தித்திக்கும்' எனத்தொடங்கும் தமிழ்விடுதூது பாடல்
(அல்லது)
ஆ) 'சொல் அரும்' எனத் தொடங்கும் சீவகசிந்தாமணிப்பாடல்

பிரிவு - 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க 2×3=6

35) தன்வினை, பிறவினை - எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக
36) தற்குறிப்பேற்ற அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக
37) அலகிட்டு வாய்பாடு தருக
ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னு மவர்.

பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 5×5=25

38) அ) இராவண காவியத்தில் உங்களை ஈர்த்த இயற்கை எழில் காட்சிகளை விவரிக்க
(அல்லது)
ஆ) பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக
39) அ) சுற்றுச்சூழலைப் பேணிக்காக்கும் பள்ளிகளின் வரிசையில் மாவட்டத்திலேயே சிறந்ததாக உங்கள் பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டாடும் விழாவில் கலந்து கொள்ளும் மாவட்டக்கல்வி அலுவலருக்கு வரவேற்பு மடல் ஒன்றை எழுதுக.
(அல்லது)
ஆ) உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ் - தமிழ் - ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி பத்துப்படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.
40) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக



41) விளம்பரத்தைச் செய்தித்தாள் செய்தியாக மாற்றி அமைக்க

புத்தகம் படிப்போம்! புதியன அறிவோம்!

**புத்தகத் திருவிழா**

நாள் - செப்டம்பர் 19 முதல் 28 வரை
இடம் - சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்
நேரம் - காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை
(முதல் நாள் காலை 9 மணிக்குத் தமிழகக் கல்வி அமைச்சர் தொடங்கி வைக்கிறார்)
(நாள்தோறும் மாலை 6 மணிக்குப் புதிய புத்தகங்கள் வெளியிடும் சிறப்புப் பேச்சாளர்களின் உரையும் இடம்பெறும்)
அனைவரும் வாரீர்! அறிவுத்திறம் பெறுவீர்!

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

42) அ) உங்களுடைய நாட்குறிப்பில் இடம்பெற்ற ஒரு வாரத்திற்குரிய மகிழ்ச்சியான செய்திகளைத் தொகுத்து அட்டவணைப்படுத்துக.

| | |
|---|---|
| திங்கள் | வருத்தம் தெரிவிக்கிறேன். பொறுத்துக் கொள்ளவும் ஆகிய சொற்றொடர்களை இன்று இரண்டு முறை வகுப்பில் பயன்படுத்தினேன். இதனால் புதிய நண்பர் கிடைத்தார் |
| செவ்வாய் | |
| புதன் | |
| வியாழன் | |
| வெள்ளி | வீட்டிற்குத் தேவையான பொருள்களை நானாக முன்வந்து வாங்கிக்கொடுத்தேன். அம்மா பாராட்டினார். |
| சனி | |
| ஞாயிறு | |

**(அல்லது)**

ஆ) **மொழிபெயர்க்க**

Conversation between two friends meeting by chance at a mall.

**Aruna** : Hi Vanmathi! It's great to see you after a long time.
**Vanmathi** : It's great seeing you. How long has it been? It must be more than 6 months. I'm doing good. How about you?
**Aruna** : Fine. I have come with my parents. They are inside the grocery shop. What about you?
**Vanmathi** : I came with my father. He has gone to buy tickets for a 3D movie.
**Aruna** : Which movie?
**Vanmathi** : Welcome to the jungle.
**Aruna** : Great! I am going to ask my parents to take me to that movie.

செக்டோர். மு.,
பத்ராம் மெட்ரிக் மேநிப
வல்லம். 627809

**பகுதி - V**

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்க** **3×8=24**

43) அ) திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரி

**(அல்லது)**

ஆ) இந்திய தேசிய இராணுவத்தின் தூண்களாகத் திகழ்ந்தவர்கள் தமிழர்கள் என்பதைக் கட்டுரைவழி நிறுவுக

44) அ) 'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக

**(அல்லது)**

ஆ) 'தாய்மைக்கு வறட்சி இல்லை' என்னும் சிறுகதையில் வரும் ஏழைத்தாயின் பாத்திரப்படைப்பை விளக்குக.

45) அ) **குறிப்புகளைக் கொண்டு கட்டுரை வரைக.**

முன்னுரை - கல்வியின் இன்றியமையாமை - பெண்கல்வியின் அவசியம் - பெண்கல்வியின் பயன்கள் - இன்றைய பெண்கல்வி - சாதனைப் பெண்கள் - முடிவுரை.

**(அல்லது)**

ஆ) நீங்கள் விரும்பிப்படித்த நூல் ஒன்றுக்கு மதிப்புரை எழுதுக.

- - - - - -

www.Padasalai.Net